# ஆக்கிரமிப்பு - ஆதிக்கப் பேராசை மாறவில்லை

இலங்கை - ஈழ ஆக்கிரமிப்புப் போரிலே தோற்று நாடு திரும்பும் இந்திய இராணுவத்துக்கு செயற்கையான உற்சாக மூட்டும் முயற்சியில் தாமே நம்பாத பொய்களை இந்திய ஆட்சியாளர்களும், அதிகாரிகளும், தளபதிகளும் பேசி வருகின்றனர்.

திரிகோணமலையில் நடந்த வழியனுப்பும் சடங்கின் போது இந்தியத் தூதர் மெஹ்ரோத்ரா ''உங்களைக் குறித்து நாங்கள் பெருமைப்படுகிறோம். உங்களுடைய சாதனைகளை வரலாறு பொன்னெழுத்துக்களில் பொறிக்கும். இலங்கையின் அமைதியையும் ஒருமைப்பாட்டையும் காக்கும் பணியை உறுதியான தியாகத்தோடு நிறைவேற்றினீர்கள். பெருமையும் நன்றியுணர்வும் மிக்க தேசம் உங்களை வரவேற்க இந்தியக் கரையிலே காத்திருக்கிறது'' என்றார்.

இங்கே வரவேற்பு வைபவமோ கருமாதி சடங்கு போல நடந்து முடிந்தது. ''நாட்டின் கௌரவத்துக்காகப் போராடி உயிர் தியாகம் செய்தவர்களுக்காக தலைவணங்கி அஞ்சலி செலுத்துகிறோம். பெருமையோடும் நன்றியோடும் தேசம் அமைதிப் படையை வரவேற்கிறது. ஏனெனில் இந்தியாவின் நற்பெயர், கௌரவம், மதிப்பு ஆகியவற்றைக் கடினமான சூழ்நிலையிலும் போரிட்டுக் காத்தனர்'' என்று புகழ்ந்தார் தமிழக ஆளுநர் அலெக்சாண்டர்.

''அவர்களுடைய வேண்டுகோளை ஏற்றுப் போனோம். அதற்கு அவர்கள் நன்றி கூறாவிட்டாலும் எவ்வளவோ சிரமங்களுக்கிடையே உங்களது கடமையைத் திருப்திகரமான முறையில் ஆற்றியுள்ளீர்கள். அதற்காக நாடு உங்களுக்கு ஆழமாகக் கடமைப்பட்டுள்ளது'' என்றார் இராணுவத் துணை மந்திரி ராஜாராமண்ணா. இதையே நாடாளுமன்றத்தில் சொன்னார் ராணுவ மந்திரியாகவும் உள்ள பிரதமர் வி.பி.சிங்.

அப்படி என்ன இந்திய இராணுவம் இலங்கையிலே சாதித்துவிட்டது? தளபதிகளும் அதிகாரிகளும் ஒரே குரலில் புளுகுகின்றனர். ''இலங்கை பிளவுபடாத நட்பு நாடாக இருக்கவேண்டும்; தமிழர் பிரச்சினைக்கு அரசியல் ரீதியில் தீர்வுகாண வேண்டும் என்பதுதான் இந்தியாவின் நோக்கம். தமிழர் பிரச்சினையை இராணுவ ரீதியில் தீர்ப்பதற்கு இலங்கை அரசு முயன்றது; தமிழர்களும் தனி ஈழம் கோரிப் போரிட்டனர். இலங்கை ராணுவம் பாசறைக்குள் முடக்கப்பட்டது; புலிகள் ஜனநாயக - சமாதானப் பாதைக்குத் திரும்பி, தனி ஈழம் கோரிக்கையைக் கைவிட்டுவிட்டனர். இலங்கை அரசும் புலிகளும் பேச்சுவார்த்தை நடத்துகின்றனர். அதிகாரம் பரவலாக்கப்பட்டு, வடகிழக்கு மாகாண கவுன்சில் அமைந்துவிட்டது. ஈழத்தில் அமைதி நிலவுகிறது'' என்று கிளிப்பிள்ளைகள் போல அவர்கள் அனைவரும் ஒப்புக்கின்றனர்.

இந்திய - இலங்கை விவகாரங்களைக் கவனித்து வரும் எல்லோருக்குமே இது அப்பட்டமான புளுகு என்பது தெரியும். அரசியல், இராணுவம், அரசு தந்திரம் ஆகிய மும்முனைகளிலும் இந்தியா படுதோல்வி கண்டுள்ளது என்ற உண்மையை எவ்வளவு முயன்றாலும் மறைக்கவே முடியாது.

இலங்கையின் ஐக்கியத்தைக் காப்பதும், அமைதியை நிலைநாட்டுவதும்தான் இந்தியாவின் நோக்கமாயிருந்ததாம்! அப்படியானால், ''எங்களுக்குள் பேசித் தீர்த்துக் கொள்கிறோம். போரை நிறுத்துங்கள்; படையை விலக்கிக் கொள்ளுங்கள்'' என்று புலிகளும், பிரேமதாசாவும் கோரி - நிர்ப்பந்தித்தபோதும் இந்தியா ஏன் மறுத்தது? என்ன கூறியது? அதன் பிறகும் தமிழ் தேசிய இராணுவம், குடிமக்கள் தொண்டர் படை ஆகிய கூலிப்படையை உருவாக்கி பயிற்சியும் ஆயுதங்களும் தரவில்லையா? ஈழத் துரோகிகள் வெளியேறும் முன்பு தனி ஈழம் பிரகடனம் செய்ய அனுமதித்தது ஏன்? இன்னமும் அவர்களுக்கு தஞ்சமளித்து உதவுவது எதற்காக?

இன்னும் இலங்கை பிளவுபடாமல் இருக்கிறது. ஈழத்தில் அமைதி ஏற்பட்டுள்ளது என்றால் அவை இந்தியா மேற்கொண்ட முயற்சிகளுக்கும், எதிர்பார்ப்புகளுக்கும் மாறான எதிரான விளைவுகள் தாம்! இந்தியா அதற்கான உரிமை பாராட்டுவது வெறுக்கத்தக்க கேலிக்குரியது தான்!

இலங்கை விவகாரத்தில் இந்
தலையிட்டதற்காக அது என்னதான் அ
ரபூர்வமாகக் கூறி வந்தாலும் அதன்
நோக்கம் வேறானதுதான்.

இந்தியாவின் ஆதிக்கப் பிரதி
யாக ''வைஸ்ராய்'' என்றழைக்கப்பட்ட
இந்தியத் தூதர் ஜே.என்.தீக்சித். அவர்
ரங்கமாகவே சொன்னார். ''நிர்ப்பந்
னாலோ, நிலை தடுமாறியோ அண்
நாடுகளில் ஏதேனும் நம்மை மிரட்டின
எதிர்கொள்ளும் வல்லமை எங்க
இருக்கிறது; அவர்களுக்குப் பாடம்
டும் வகையில் அவர்களுடைய பிராந்
களுக்குள் புகுந்து நிலை கொள்ளும்
யல் உறுதியும் எங்களுக்கு இருக்
என்று நமது செல்வாக்கைக் காட்டுவ
இலங்கையில் அமைதிப்படை தங்கி
பது நிரூபணமாக விளங்குகிறது.''

ஆகவே, இந்த பிராந்திய ஆதி
வல்லமையைக் காட்டுவது ஆகிய நோ
தோடு தான் இலங்கை ஆக்கிரமிப்பு
தது. 1949 இல் இருந்தே இந்த பிராந்
துணை வல்லரசு 'பேட்டை ரௌடி
இந்தியா முயன்று வந்திருக்கிறது. 19
ஆண்டுகளில் பர்மா, இந்தோனே
வுக்கு இராணுவ உதவி என்கிற பெ
தலையீடு; 1960களில் நேபாள ஆ
கவிழ்ப்புகளில் பங்கேற்றது; பா
னைப் பிளவுபடுத்தியது; அண்டை
ளுடன் ஆக்கிரமிப்புப் போர்கள் நடத்
ஆகியவற்றின் தொடர்ச்சியாக இல
யில் ஆதிக்கத்தை நிறுவ முயன்றது
காக 1974 முதலே இலங்கை - ஈழ வி
தில் 'ரா' தனது கைவரிசையைக் காட்
கிறது. இந்தியாவின் இராணுவ ஆ
ரும், யுத்த நுட்ப வல்லுநருமான கே
மணியம் இதை ஒப்புக் கொள்கிறார்.

''அமைதிப்படை இலங்கையில்
இருப்பதால், இந்தப் பிராந்திய வல்
இந்தியா அங்கீகாரம் பெற்றுள்ளது.
சக்தி நீர்மூழ்கித் திட்டங்கள் வாங்
மாலத் தீவில் தலையிட்டது. அக்கினி
னைச் சோதனைகள் அதற்கு மேலும்
ஊட்டின. இவற்றினால் தான் இந்திய

உதைபட்டு வந்த இந்திய ராணுவத்தை, அதன் தளபதி கல்கத்தை பெருமையோ வரவேற்கும் தமிழக கவர்னர் அலெக்சாண்டர், மத்திய துணை ராணுவ மந் ராஜாராமண்ணா.



ரிய பகுதியாக தெற்கு ஆசியாவை வல்லரசுகளும் அங்கீகரித்தன. இராணுவ பலம், அதைப் பிரயோகிப் பதற்குள்ள உறுதி ஆகியவை காரண ...தான் இலங்கை அதிபர் அமெரிக்க ...வை நாடியபோது அது மறுத்துவிட் டு இந்தியாவை நாடும்படி அவர் நிர்பந் திக்கப்பட்டார். இதனால்தான் மாலத்தீவுக இந்தியா மேற்கொண்ட போலீசு ...யை அமெரிக்கா ஆதரித்தது'' என்று கருத்தரங்கில் பகிங்கரமாகவே பேசி இந்தியக் கடற்படையின் முன்னாள் ...தி நட்கர்னி. வங்கதேசப் படையெடுப் ...தலைமை ஏற்ற தளபதி அரோராவும் ...கருத்தைத் தெரிவித்தார்.

"ஆசியாவின் புதிய வல்லரசாக இந்தி ...' என்ற அட்டைப்படக் கட்டுரையை ...டன் 'டைம்ஸ்' ஏடு எழுதியபோது இந் ... மறுத்தது. ஆனால் இந்தியாவின் ...தை அங்கீகரிப்பதாக அதையே பெரு ...மையோடு இந்திய வெளிவிவகார அமைச்ச ...கருதியது. இந்தியா அரசியல் பொருளா ...தியில் வளரும் பிராந்திய வல்லரசு ... அமெரிக்கா ஒப்புக் கொண்டுவிட் ...எனவேதான் சமீபகாலங்களில் அதன் ...படைத் தளபதிகளை இந்தியாவுக்கு ...அனுப்பியது என்று பெருமையடித்துக் ...கொள்ளுகிறது.

ஆகவே, இந்தியாவின் விரிவாக்க, ...ஆக்கிரமிப்பு, ஆதிக்கப் பேராசைதான் ...இலங்கை - ஈழ விவகாரங்களில் இந்தியா ...இராணுவத் தலையீடு செய்ததற்குக் கார ...ணம். இப்போது அது ஈழத்தில் இருந்து ...துரத்தி விரட்டப்பட்டதானது, அதன் ...பேராசைகளுக்கு நேர்ந்த பின்னடைவுதான்!

தற்போது இந்தியாவில் ஆட்சி நடத்தும் தேசிய முன்னணியின் கட்சிகள் அனைத்துமே எதிர்க்கட்சியாக இருந்தவரை காங்கிரசு ஆட்சியின் இலங்கை - ஈழக் கொள்கைகளை எதிர்த்து வந்தன. ஆனால் ஆட்சிக்கு வந்தபிறகு அதே விரிவாக்க, ஆக்கிரமிப்பு, ஆதிக்கப் பேராசையைத் தொடர்கின்றன.

பாசிச ராஜீவ் கும்பல் ஒப்புக் கொண்ட கெடுவான 1989, டிசம்பர் 31க்குள் படைவிலக்கம் செய்து கொள்ள மறுத்தது. ஒருபுறம் கருணாநிதியை வைத்து ஈழப்போராளிக் குழுக்களுடன் பேரங்கள் நடத்தியது; மறுபுறம் 'நட்புறவு ஒப்பந்தம்' என்கிற பெயரில் சமனற்ற இன்னொரு ஒப்பந்தத்தை இலங்கையின் மீது திணிக்க முயன்றது. இந்த முயற்சிகள் பலிக்காமல் போகவே, தனது கூலிப்படையும் புலிகளை எதிர்கொள்ள முடியாமல் வீழ்ச்சியடையவே வேறு வழியின்றி படைவிலக்கம் செய்து கொண்டது.


இந்திய அரசின் பிராந்திய ஆதிக்கக் கொள்கையை வகுத்து அமுல்படுத்திய அதிகாரவர்க்கத்தினராகிய பிரதமர் அலுவலகத்தில் உள்ள ரோனன்சென், ஏ.என்.வர்மா, வெளிவிவகார அமைச்சகத்திலுள்ள செயலாளர் கே.என்.சிங், குல்தீப் சகாதேவ் ஆகியோர் இன்னமும் அதே பொறுப்பு - பதவிகளில் நீடிக்கின்றனர். பாசிச ராஜீவ் கும்பலின் இலங்கை - ஈழக் கொள்கைகளையும் ராஜீவ் - ஜெயவர்த்தனே ஒப்பந்தத்தையும், ஈழ ஆக்கிரமிப்பு போரையும் கூட புதிய தேசிய முன்னணி ஆட்சியாளர்கள் நியாயப்படுத்தி வருகிறார்கள்.

பாசிச இந்திரா - ராஜீவ் கும்பலின் விசுவாச உளவுப் படையான 'ரா'வில் கூட களையெடுப்புகள் எதுவும் இல்லை. 400க்கும் மேற்பட்ட உயர் அதிகாரிகளுக்கு மேலும் பதவி உயர்வுகளும் சலுகைகளும் வழங்கப்பட்டுள்ளன. ஈழ துரோகிகளான முக்கூட்டு அமைப்பினருக்கு இந்தியாவில் தஞ்சமளித்திருப்பது கூட பழைய விசுவாசம்தான். அடிவருடித்தனங்களுக்கு நன்றிக்கடன் செலுத்துவதற்காக இல்லை. அவர்களை மறு ஒழுங்கு செய்து, பயிற்சியும் ஆயுதங்களும் கொடுத்து மீண்டும் ஈழத்துக்கு அனுப்புவதற்காகத் தான். இதற்காகத் தான் ஈழத்தில் இருந்து மீண்டும் ஆயுதங்களைக் கடத்தி வருகிறார்கள்; தமிழகத்தில் உள்ள முன்னாள் இந்திய் இராணுவத்தினரது கூலிப்படையை திரட்டி, கேரளத்தில் போலிக் கம்யூனிஸ்டுகளின் ஆதரவோடு பயிற்சிகள் தொடங்குகின்றனர்.

புதிய ஆட்சியாளர்களும் விரிவாக்க, ஆக்கிரமிப்பு, ஆதிக்க பேராசையை நனவாக்கிவிட முடியும் என பகற்கனவு காண்கிறார்கள். ஆனால் அது எதிர்விளைவுகளைத் தான் தோற்றுவிக்கும். அகதிகளாக வந்துள்ள ஈழத் துரோகிகள் கொலை, கொள்ளை, கடத்தல் முதலிய சமூக விரோத நடவடிக்கைகளில் இறங்குவர், ஈழத்தில் இருந்து, போராளிகளுக்கு இடையே உள்ள குழுச் சண்டை தமிழ் நாட்டிற்கும் விரிவாக்கப்படும். இங்கேயுள்ள சில இனவாதக் குழுக்கள் பயங்கர வாத அரசியலுக்குப் பலியாவார்கள். ஆனால் பழைய, புதிய ஆட்சியாளர்களின் பேராசைகள் மட்டும் ஒருபோதும் நிறைவேறாது. ஈழ ஆக்கிரமிப்பு போரைப் போலவே பெருந்தோல்வி தான் அவர்களுக்குக் கிட்டும்.

— மாணிக்கவாசகம்

# நகராட்சி மருத்துவமனைகள் சீர்கேட்டை எதிர்த்து....



திறந்தவெளி கழிப்பிடம். இதில் ...யம் நடத்தும் பன்றிகள். தேங்கிநிற் ...கும் சாக்கடை. இதில் துயில் கொள்ளும் ...மக்கள். - இதுதான் இந்தியாவின் அடிப் ...படை வசதிகள். இந்திய உழைப்பாளி குடும் ...பங்களின் வசிப்பிடமும் இதுதான். இவர் ...கள் நோய் கிரிமிகளால் தாக்கப்பட்டு அடிக் ...கடி நோயில் படுக்க நேரிடுகிறது. அரசியல் ...வாதிகள் - அதிகாரிகள் - மேட்டுக்குடியினர் ...போல் வைத்தியம் பார்க்க இவர்களால் ...அமெரிக்காவிற்கு பறக்க முடியாது. அருகே ...உள்ள நகராட்சி மருந்தகத்தைத்தான் நாட ...வேண்டும் இல்லையென்றால் விதியே என ...இருக்கவேண்டியதுதான். இதுதான் பலகோடி ...உழைப்பு மக்களின் நிலை.

திருச்சி வரகநேரி நகராட்சி மருந்தகம், ...வரகநேரி, தாராநல்லூர், உப்புப்பாறை, அரி ...யமங்கலம் பகுதிகளில் உள்ள சுமார் 1 லட் ...சம் உழைப்பாளி மக்கள் இங்குதான் ...சிகிச்சை பெற வேண்டியுள்ளது. ஆனால், ...இங்கு தேவையான மருந்து மாத்திரைகள் ...இல்லை. நகராட்சி வழங்குகிற நிதியில் முக் ...கால் பங்கு, வேலை செய்யும் ஊழியர்களின் ...சம்பளத்திற்கு போய்விடுகிறது. மருந்து ...மாத்திரைகள், பஞ்சுதுணி வகையறாக்கள் அனைத்தும் மீதியுள்ள கால்பங்கிற்குள் தான் வாங்க முடியும். அதாவது வருடத்திற்கு ரூ.3000-க்கு மட்டுமே இவைகளை வாங்க முடிகிறது. இதை ஒரு மாதத்திற்கு, ஒரு நாளுக்கு என பிரித்து வைத்துக் கொண்டு மருந்தகம் நடத்த வேண்டியுள்ளது. இதனால், ஊசியில்லை, மாத்திரையில்லை, கட்டுப்போட துணியில்லை என நோயாளிகளை திருப்பி அனுப்பி விடுகிறார்கள். பலசமயம் சம்பந்தமற்ற மாத்திரைகளை தந்து நோயாளிகளை திருப்திபடுத்துவதும் உண்டு. மேலும், இங்கு பெண் ஊழியர்கள் இல்லை. இதனால் பெண்கள் இங்கு சிகிச்சைபெற கூச்சப்படுவதும் - சங்கடப்படுவதுமாக அவதிப்படுகிறார்கள். இந்நிலைதான் திருச்சியிலுள்ள 10 நகராட்சி மருந்தகங்களிலும் நிலவுகிறது.

கோடி கோடியாக வரிப்பணத்தை விழுங்கும் திருச்சி நகராட்சியால் இம்மருந்தகங்களுக்கு நிதி ஒதுக்க முடியாமல் இல்லை. சமீபத்தில் திருச்சியில் நடந்த தி.மு.க.வின் 6வது மாநில மாநாட்டிற்கு நகரத்தலைவர் பாலகிருஷ்னன் 'சோடியம் பல்ப்' நகராட்சி செலவில் போட்டு தருவதாக கோரியிருக்கிறார்

மூன்றுநாள் கூத்துக்காக வலிய போய் சேவகம் செய்ய முன்வந்த பாலகிருஷ்ணனுக்கு பல வருடங்களாக இப்படி அவதிப்படும் மக்கள் குரல் காதிற்கு கேட்கவில்லை. மேலும் அரசியல்வாதிகள் - அதிகார மேட்டுக்குடியினர் வாழும் பகுதிகளுக்கு மட்டும் ஓடோடி போய் சேவை செய்கிறது நகராட்சி. எனவே, இவற்றை எதிர்த்து

★ பெண் ஊழியர்களை நியமனம் செய்!

★ தரமான - போதுமான மருந்து மாத்திரைகள் கிடைக்க வழிவகை செய்!

★ மருந்தகத்திலும் - பகுதிகளிலும் சுகாதர வசதி செய்து கொடு!

என கோரிக்கைகளை வைத்து 30.4.90 அன்று காலை 11 மணிக்கு திருச்சி நகராட்சி அலுவலகம் முன்பு பகத்சிங் இளைஞர் முன்னணியினர் கூடி ஆர்ப்பாட்டம் நடத்தினர். பகுதிமக்கள் மற்றும் இளைஞர்கள் ஆதரவுடன், இவர்கள் நடத்திய இப்போராட்டம் நகராட்சி அதிகாரிகள் மத்தியில் சர்ச்சையை கிளப்பியிருக்கிறது.

தகவல்: பகத்சிங் இளைஞர் முன்னணி, திருச்சி